[4th July 1962

*124 Q.—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(a) whether it is a fact that he visited recently incognito the Kothavalchavadi in Madras City;

(b) whether he has made any observation in this connection; and

(c) whether a copy of the reference sent to the Corporation of Madras in this regard will be placed on the Table of the House?

THE HON. SRI S. M. A. MAJID: (a) A surprise visit was made on 9th May 1962;

(b) Yes, Sir; and

(c) No, Sir.

Hospitals for N.G.Os.

*125 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether there is any proposal to construct hospitals exclusively for N.G.Os.; and

(b) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) The question of providing separate hospital facilities for Non-Gazetted Officers is under consideration; and

(b) The details have not yet been settled.

Expanded Nutrition Programme

*126 Q.—SRI V. SANKARAN AND SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the nature of help received from FAO, WHO and UNICEF for implementing the "Expanded Nutrition Programme"; and

(b) the centres selected for the implementation of this programme?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Under the Expanded Nutrition Programme, UNICEF have agreed to provide technical supplies and equipment, as also, financial assistance to cover the cost of stipends and travel in connection with the training programme. The total UNICEF allocation for the programme as a whole is estimated at $ 2,45,000. The programme has the technical approval of the Food and Agriculture Organization and World Health Organization. Food and Agriculture Organization and World Health Organization will provide experts and technical assistance and guidance to the Project at the request of the State Government; and

(b) the programme is implemented in the seven rural extension training centres at Krishnagiri, Bhavanisagar, S.V. Nagaram, T. Kallupatti, Aduthurai, Pattukkottai and Koilpatti and in the seven blocks attached to the training centres.

4th July 1962]

திரு. கே. மூக்கையா தேவர் : எந்த அடிப்படையில் இந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பரவலான முறையிலே இம் மாதிரி ஏழு இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. மூக்கையா தேவர் : இந்தத் திட்டத்தை நிறை வேற்றுவதற்காக இடங்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, எந்த அடிப்படையிலே எடுக்கப்படுகின்றன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஏழு ஸ்தலங்களைத் தேர்ந் தெடுக்கவேண்டும். ஏதாவது ஏழு இடங்களைத்தான் தேர்ந் தெடுக்க முடியும். அப்படித் தேர்ந்தெடுக்கும்பொழுது, ஒரே மாவட்டத்திலே இல்லாமல், பரவலான முறையிலே தேர்ந்தெடுக் கிறோம்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

* திரு. ஜே. மாதா கவுடர் : ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர் மேஷன், ஸார். கேள்வி நேரத்திற்காக நாம் ஒரு மணி நேரம் ஒதுக்கியிருக்கிறோம். அரை மணி நேரத்திற்குக்கூட கேள்விகள் வரவில்லை. ஏராளமான கேள்விகளை அங்கத்தினர்கள் கொடுத் திருக்கிறார்கள். இந்த கேள்விகளுக்கெல்லாம் சம்பந்தப்பட்ட இலாகாக்களிலிருந்து உடனடியாக பதில்கள் வருவதற்கு கனம் சபாநாயகர் அவர்கள் கவனிப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நாம் நிச்சயமாக இந்த மாதம் 28-ம் தேதிவரையில் கூட்டம் நடத்துவோம். அதற்குள்ளாக, அநேகமாக அனுப்பப்பட்ட கேள்விகளுக்கு எல்லாம் விடை அளிக்கப்படுமென்று நான் நம்புகிறேன்.

II.—STATEMENT BY A MEMBER *re* HIS SUPPLEMENTARY QUESTION.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஆன் எ பாயின்ட் ஆப் பெர்ஸனல் எக்ஸ்பிளனேஷன், ஸார். நேற்றைய தினம் கேள்வி நேரத்தின் போது, நான் கொடுத்த தகவலில் ஒரு தவறைத் திருத்துவதற் காக நான் எழுந்து நிற்கிறேன். கனம் அங்கத்தினர் ஸ்ரீ மூக்கையா தேவர் சர்க்கார் உத்யோகஸ்தர்களின் மருத்துவச் சலுகைகள் சம்பந்தமாக கேள்வி போட்டபொழுது நான் ஒரு உப கேள்வியைக் கேட்டது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். அந்த உப கேள்வியில், விலை உயர்ந்த மருந்துகளை என்.ஜி.ஓ.-க் களுக்கு அளிக்கக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு போட்டிருக் கிறதா என்று கேட்டேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள், அப்படியிருந்தால் அந்த உத்தரவைக் காட்டுங்கள் என்று கேட்டார். அது அரசாங்க உத்தரவு அல்ல, டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸ் அனுப்பியிருக்கக்கூடிய ஒரு சுற்றறிக்கை